சிறந்த புளொக் தயாரிப்பாளர்
Quality
BLOCK MAKERS
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்



★ ★

Registered as a Newspaper in Ceylon — விலை சதம் 10

# ஈழநாடு

Vol 7 — EELA NADU — இதழ் 158

National Tamil Daily — தேசிய தினசரி

(19-7-65)

விசுவாவசு ஆடி 4 — ரபி: அவ்வல் பிறை 19 — திங்கட்கிழமை



கண்ணைக் கவரும்
தங்க, வைர நகைகளுக்கு



போன்: 585

K. N. M.

மீருன் சாஹிப்

கன்னாதிட்டி, - யாழ்ப்பாணம்.


## "இரு சமூக ஐக்கியத்துக்கு புத்தபெருமானே துணைபுரிந்தார்

### சிங்களவர்-தமிழர் ஒற்றுமையை எவரும் நாசப்படுத்த முடியாது"

— மந்திரி

சாவகச்சேரி, ஞாயிறு

"இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மை இனத்தவரின் மொழியையும் அவர்களுடைய உரிமைகளையும் பாதுகாக்கக் கூடிய விதத்தில் ஒரு அரசாங்கம் இலங்கையில் நிறுவப்படுவதற்கு புத்தபெருமான் தான் அருள் புரிந்துள்ளார்" இவ்வாறு காணி, நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வா இராமநாதன் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றலில் மேற்படி சங்கத்தவரும் அங்கத்தவர்களும் அளித்த வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார். இந்த வரவேற்புக் கூட்டத்திற்கு முன்னாள் கிளிநொச்சி எம்.பி. திரு. ஏ. சிவசுந்தரம் தலைமைவகித்தார்.

மந்திரி சில்வா தொடர்ந்து பேசுகையில், நகர்ப்புற பிள்ளைகளுக்கு அளிக்கப்படுவது போன்று கிராமப்புறப் பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியளிப்பதே தேசிய அரசாங்கத்தின் கொள்கையாகும். இயற்கையான அறிவு நுட்பங்களின் திறனை அரசாங்கம் ஆவன செய்வதே ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவம். கிளிநொச்சித் தொகுதியில் ஒரு சிறந்த பாடசாலையின் அவசியம் பற்றி நீங்கள் கூறியிருக்கிறீர்கள். கிளிநொச்சியில் நவீன விஞ்ஞான ஆய்வு கூடம், விளையாட்டரங்கு ஆகியவைகொண்ட சிறந்த பாடசாலை ஒன்றை நிறுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வியமைச்சரைக் கேட்டுக் கொள்வேன் என்றும் கூறினார்.

திரு. சிவசுந்தரம் தமது தலைமையுரையில் இலங்கையில் தேசிய அரசாங்கம் நிறுவப்பட்டதன் மூலம் ஒரு மற்றமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அல்லற்பட்ட இனமாக இதுவரை வாழ்ந்துவந்த தமிழினத்தின் பிரச்னைகள் அன்பின் வழியில் தீர்க்கப்படுமென்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டிருக்கிறது என்றார்.

கரைச்சிப் பகுதி குடியேற்ற வாசிகளின் கலருரிமைச் சங்கத்தின் சார்பில் சில வேண்டுகோள்களும் அமைச்சர் சில்வாவிடம் சமர்ப்பிக்கப்பட்டது, கூட்ட முடிவில் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.

### ஆணையிறவில்

"சிங்களவரும் தமிழரும் சௌஜன்யமாக - சபீட்சமாக வாழவேண்டுமானால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை இரு சமூகத்தினரும் கடைப்பிடிக்க வேண்டும். இதன் மூலமாகவே இந்த நாட்டில் அமைதி ஏற்பட்டு முன்னேற்றமடையக் கூடிய அறிகுறி தென்படும்" என்று காணி நீர்ப்பாசன, மின்சார மந்திரி திரு. சி. பி. டி. சில்வா தெரிவித்துள்ளார்.

ஆனையிறவுவாடியில் நேற்று பூலோகபளை கிராம சபைத் தலைவர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் அளித்த மத்திய போசன விருந்தின்போது பேசுகையிலேயே மந்திரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார் மந்திரி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"ஒரு காலத்தில் தமிழர்களும் சமசமாஜ கட்சியினரும் சேர்ந்து பேசினார்கள். தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து பெற்றுத் தருவோம் என்று வடக்கிலும் கிழக்கிலும் பிரச்சாரம் செய்து வந்தார்கள். ஆனால் இன்று நடப்பதென்ன? ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அதற்கு முரணான வகையில் வகுப்புவாதத்தைக் கிளப்பி வருகின்றனர். வகுப்புவாத துவேஷத்


(6-ம் பக்கம் பார்க்க)


காங்கேசன்துறை

## இறங்குதுறை அமைப்பு குறித்து பரிசீலனை

### நிபுணர்களின் அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும்

காங்கேசன் துறை, ஞாயிறு

காங்கேசன் துறையில், இறங்குதுறை அமைப்பது சம்பந்தமாக பரிசீலனைகள் நடத்துவதில் ஐ. நா. தொழில் நுட்ப நிபுணர்கள் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர். இறங்குதுறை அமைப்பது பற்றிய உத்தியோக பூர்வமான அறிக்கையை தொழில் நுட்ப நிபுணர் கோஷ்டி விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்குமெனத் தெரிய வருகிறது.

ஐ. நா. நிபுணர் திரு பி. மியூஸ், நிலநிபுணர்களும் துறைமுக கமிஷன் அதிகாரிகளும் கொண்ட கோஷ்டியுடன் காங்கேசன் துறைக்கு வந்துள்ளார்.

இதுகுறித்து அவர் எமது நிருபரிடம் தெரிவிக்கையில் துறைமுக அபிவிருத்தி வேலைகளுக்கும் இறங்குதுறை அமைப்பதற்கான வேலைகளுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லையென்றும் 120 அடி நீளம் 10 அடி அகலம் கொண்டதாக இரு இறங்குதுறைகள் அமைப்பதற்கான பரிசீலனைகள் தற்போது நடைபெற்று வருகிறது என்றும் கடலின் ஆழம், நீளம் கற்பாறைகள் பற்றிய ஆராய்ச்சியில் இப்போது ஈடுபட்டு வருவதாகவும் கூறினர்.

# இராமநாதன் சர்வகலாசாலை

## அதிகாரிகள் நேரில் பரிசீலனை

யாழ்ப்பாணம், திங்கள்

**யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியும் உபசர்வகலாசாலைகளாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.**

கொழும்பிலிருந்து வந்த அதிகாரியொருவர் நேற்று முன்தினம் இராமநாதன் கல்லூரிக்கும் பரமேஸ்வராக் கல்லூரிக்கும் சென்று கண்டிட, நிலப்பரப்பு அளவு எடுத்துச் சென்றுள்ளார். திரு. வீ. துங்கா என்ற அந்த அதிகாரியுடன் வடபகுதி உதவி கல்வி அதிகாரி திரு. எஸ். தணிகாசலமும் இரு கல்லூரிகளுக்கும் சென்றிருந்தார்.

இலங்கைச் சர்வகலாசாலையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியை நீக்குமுகமாக காலி, குருநாகல், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சர்வகலாசாலைப் பிரிவுகளை ஏற்படுத்துவதென்ற திட்டத்தின் அடிப்படையிலேயே இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவைகள் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதாயினும் யாழ்ப்பாணத்தில் இந்த சர்வகலாசாலை அமைப்பதென்ற முன்னைய அரசாங்கம் செய்த முடிவு விரைவில் அமுலாவதற்கு இது அறிகுறியென்று கருதப்படுகிறது.

## இறங்குமதியில் ஒரு சாதனை

காங்கேசன் துறை, ஞாயிறு

காங்கேசன் துறைத் துறைமுகத்திற்கு மாவு ஏற்றிக் கொண்டு வந்துள்ள அல்கிசோவா என்ற கப்பலிலிருந்து நேற்று துறைமுகத் தொழிலாளர் 8 மணி நேரத்தில் 17250 மாவு மூடைகளை இறக்கி காங்கேசன்துறை துறைமுகத்திலேயே ஓர் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளனர். இந்தத் தொழிலாளர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு துறைமுகத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். இந்தக்கப்பலில் இறக்குமதி மேற்பார்வைப் பொறுப்பு காங்கேசன்துறையில் புதிதாக நிறுவப்பட்ட ஜெயபாலசிங்கம் கப்பல் இறக்குமதியாளருடையதாகும்.

## 1,10,000 பேர் மாண்டனர்

பீகிங், ஜூலை 18

இவ்வாண்டு முதல் 6 மாதங்களில் வியட்நாம் சண்டைசெயில் 1,10,000 தென்வியட்நாமியரும், அமெரிக்கரும் கொல்லப்பட்டதாக நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. இதில் 2300 பேர் அமெரிக்கர்கள் என அது கூறியது

## 14 மணி நேரத்தில் லண்டன்

### பி. ஓ. ஏ. ஸி. புதிய சர்விஸ்

கட்டுநாயக்கா, ஞாயிறு

பி. ஓ. ஏ. ஸி. விமான கார்ப்பரேஷன் கட்டுநாயகாவிலிருந்து லண்டனுக்கும், லண்டனிலிருந்து கட்டுநாயகாவுக்கும் புதிய ஜெட் விமான சேவை ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறது.

வாரம் இருமுறை இந்த சேவை நடைபெறும், பின்பக்கம் என்ஜின் கொண்ட இந்த புதிய ஜெட்விமானம், மணிக்கு 600 மைல் வேகத்தில் செல்லும் வழியில் இரு இடங்களில் மட்டுமே தரிக்கும் என்றும், 14 மணி நேரத்தில் லண்டனை அடையும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

180 பிரயாணிகள் இதில் செல்லலாம். 90 மயிலுக்கு டிக்கெட் பிரயாணிகளுக்கு விமானத்தில் இடமிருக்கும்.

இதுவரை கொழும்பில் இருந்து லண்டனுக்குச் சென்ற விமானம் 17 மணி நேரத்தில் அனது தூரத்தைக் கடந்தது, புதிய விமானம், மூன்று மணி நேரம் குறைந்த காலத்தில் லண்டனை அடையும்

## பதிலடி நிச்சயம்!

### அமெரிக்காவுக்கு ருஷ்ய பிரதமர் எச்சரிக்கை

மாஸ்கோ, ஜூலை 18

வியட்நாம் மீதான அமெரிக்க கொள்கையை சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் மீண்டும் வன்மையாகத் தாக்கியுள்ளார்.

நேற்று அவர் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில்; ஆக்கிரமிப்பு வேலைகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்காவுக்கு எதிர்த் தரப்பிலிருந்து நிச்சயம் பதிலடி கிடைக்கும் என்று எச்சரிக்கை செய்துள்ளார்

"வடக்கு வியட்நாமில் குண்டுகளை வீசி, அப்பாவி மக்களை அமெரிக்க விமானங்கள் அழித்து வருகிறது மற்றைய நாடுகளும் அதிக காலத்துக்கு இதைப் பொறுத்திருக்க முடியாது" என்றும் பிரதமர் கோஸிஜின் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் வடக்கு வியட்நாமுக்கு இராணுவ உதவிகளை அளிக்கவுடன்கொரியா முடிவு செய்துள்ளது. இந்த இராணுவ உதவிகள் விரைவில் வடக்கு வியட்நாமுக்கு வந்து சேரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மந்திரிக்கு மகஜர்

கொண்டாவிலில், ஞாயிறு

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா, அமைச்சர் திரு திருச்செல்வம், சிந்தாத்திரிப்பதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா ஆகியோருக்கு வசாவிளான் கிராமமுன்னேற்றச் சங்கம் ஓர் வரவேற்பளித்தது. மந்திரியை திரு சி. ஆறுமுகம் மலர்மாலை சூட்டி வரவேற்று சங்கத்தின் சார்பாக ஓர் மகஜரை அமைச்சர் திரு சி. பி. டி. சில்வாவுக்குச் சமர்ப்பித்தார். மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"இன்று தமிழ் மக்களுக்கும் உரிமைகள் வழங்கும் நல்லெண்ணமுடைய தேசிய அரசாங்கத்தின் அமைச்சராகத் தாங்கள் தங்கள், இனவாதிய சிக்கல் மக்களை எவ்வாறு பிணைக்கின்றீர்களோ அவ்வாறு தமிழினத்தையும் நேசிக்க வேண்டும். தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமை மனப்பான்மையுடன் ஒன்றுபட்டு வாழ்வார்களேயானால் கடந்த நூற்றாண்டுகளுக்கு முன்னால் நாடு அன்னியர்வசமானது போல


(6-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

தன்னம்பிக்கை மிகவும் அவசியம். தன்னம்பிக்கை உள்ளவரே பெருமையும் வலிமையும் எய்தியுள்ளனர் என்பது எந்நாட்டுச் சரித்திரமும் நமக்குப் போதிக்கும் உண்மையாகும்.

— விவேகானந்தர்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆடி 4 உ 1965


## உற்பத்தியும் விற்பனவும்

மானிப்பாயில் நடைபெற்ற கூட்டுறவாளர் தினவிழாவில் நடைபெற்ற பொருட்காட்சியில் கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பல பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இப்பொருள்கள் பொதுமக்களுக்கு மலிவாகவும் சுலபமாகவும் உற்பத்தியாளருக்கு நஷ்டமில்லாமலும் கிடைக்கக்கூடிய வழிகள் என்ன?

வடபகுதியில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைந்துள்ளதென்பது பலரும் அறிந்த உண்மை. கூட்டுறவு முறையில் இங்கு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்கான உற்சாகமும் ஊக்கமும் போதியளவு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. கூட்டுறவு முறையில் அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமல்ல ஆடம்பரப் பொருள்கள் கூட இங்கு உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது. மூலப்பொருள்கள் குறைவாக இருப்பினும் உழைக்கும் ஆற்றலும் திறமையும் இங்கு நிறைய உண்டு. ஆதரவும் உற்சாகமும் தான் தேவை. இவை இல்லாத காரணத்தால் கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்பட்ட சிறு கைத்தொழில்கள் கூட நசித்துப் போயிருக்கின்றன. பொருள்களை உற்பத்தி செய்வது மட்டுமல்ல உற்பத்திச் செலவு அதிகமில்லாமலிருந்தால்தான் உற்பத்தி அதிகரிக்க முடியும். தொழில்களில் ஈடுபடவும் மக்களுக்கு ஆர்வம் ஏற்படும். உற்பத்திச் செலவு குறைவாக இருப்பது மட்டுமன்றி உற்பத்தியான பொருள்கள் உடனடியாக விற்பனை செய்யக்கூடிய வழிவகைகளும் ஏற்பட்டால்தான் உற்பத்தி அதிகரிக்கும்.

கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், அத்தியாவசியப்பொருள்களாக இருப்பினும் ஆடம்பரப் பொருள்களாக இருப்பினும் அவைகளை உடனடியாக விலைக்குவாங்கி உற்பத்தியாளர்களுக்கு பணம் கிடைக்கக்கூடியதாக ஒரு ஸ்தாபனம் இருக்கவேண்டும். இவ்வித ஸ்தாபனம் இருந்தால் தரகர்களுக்கு இடமில்லாதுபோகும். உற்பத்தியாளரும் பொதுமக்களும் நன்மையடைவர். உற்பத்தியாளர்களிடமிருந்து பொருள்களை நியாயமான விலையில் உடனடியாக வாங்குவதுமட்டுமல்ல அப்பொருள்களை உடனுக்குடன் பொதுமக்கள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளக்கூடியமுறையில் இந்த ஸ்தாபனம் விற்பனை, விநியோகம் ஆகிய பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்பொழுது விற்பனவு இலாகா இப்பொறுப்பை ஏற்றுள்ள போதிலும் கொழும்பைத்தவிர்ந்த வெளியூர்களில் நல்ல முறையில் சேவைசெய்வதாகக் கூறமுடியாது.

வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைக்கப் பெரும் முயற்சி செய்துவரும் அரசாங்கம் கூட்டுறவுமுறையில் சிறு தொழில்களையும், குடிசைக் கைத்தொழில்களையும் ஊக்குவிக்கவேண்டும். மின்சார உதவியுடன் ஜப்பானைப் பின்பற்றி நவீன முறையில் உற்பத்தியைப் பெருக்க ஆதரவும் ஊக்கமும் அளித்து உற்பத்தியான பொருள்களை உடனடியாக விற்கவும் வசதி செய்யவேண்டும். இதன்மூலம் வாழ்க்கைச் செலவு குறைய வழி கிடைப்பதுடன் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவும் மார்க்கம் பிறக்கும்.

# 'கூட்டுறவுசங்கங்களின் ஆதரவுடன் தமிழ்ப் பல்கலைக்கழகம்

## சமூகத்தில் மாறுதல் ஏற்பட்டால் எமது பிரச்னைகள் நொடிப்பொழுதில் தீரும்'

### கூட்டுறவாளர் தினவிழாவில் மந்திரி பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இந்நாட்டில் தமிழ்மக்கள் மரியாதையுடன்வாழ, கலாச்சாரத்தை பாதுகாக்க, கலையை வளர்க்க, தனிப்பல்கலைக்கழகம் அவசியம் தேவை. இதற்கு கூட்டுறவு சங்கங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் வேண்டும். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் வருடம் 500 ரூபா தந்தால், ஐந்து வருடகாலத்திற்குள் தமிழர்களுக்கென ஒரு தனிப் பல்கலைக்கழகம் நிறுவமுடியும்."

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கூட்டுறவாளர் தினவிழவின் மூன்றுவது நாள் நிகழ்ச்சியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட ஸ்தலஸ்தாபன மந்திரி செனேட்டர் திரு. எம். திருச்செல்வம் பேசும்போது கூறினர்.

மானிப்பாய் அரசடி சந்தியிலிருந்து, மந்திரி திருச்செல்வத்தையும் அவரது பாரியாரையும் கல்லூரிக்கு மேளவாத்தியத்துடன் அழைத்துச் சென்றனர். கூட்டுறவு மேற்பார்வைசபை தலைவர் திரு. ராஜரத்தினம் மந்திரியை வரவேற்றார்.

திரு. ராஜரத்தினம் தலைமையில் நடைபெற்ற பகிரங்க கூட்டத்தில் மந்திரி திருச்செல்வம் மேலுமகூறியதாவது:

1956-ம் ஆண்டு முதல் இதுவரை தமிழர்களுக்கு ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இலங்கைப் பல்கலைக்கழகமொன்றை இங்கு நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆனால் இதுமட்டும் தமிழ் மக்களை திருப்தியளிக்கும் என எதிர்பார்க்க முடியாது. தமிழ் மக்கள் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக இந்நாட்டில், வாழ்ந்து வருகிறார்கள். இனிமேலும் இரண்டாயிரம் வருடங்களுக்குமேல் இந்நாட்டில் வாழ போகிறார்கள். கடந்த அரசாங்கம் தமிழ் மக்கள் விஷயத்தில் பாராமுகமாக இருந்துவிட்டது. கடந்த 9 வருடகாலத்திற்குப் பின் தமிழரசு கட்சிக்கு ஓய்வுவந்துள்ளது. தேசிய அரசாங்கத்தை ஆதரித்தல் மொழிப் பிரச்னை ஓரளவு தீரும் என்ற நம்பிக்கையிருந்தபடியால் தேசிய அரசாங்கத்தை ஆதரித்தோம்.

### நிதிஉதவி வேண்டும்

பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு, போதிய நிதியும், ஆதரவும் அவசியம் தேவை. ஒன்பது வருடங்களுக்குமுன், பல்கலைக்கழகம் வேண்டுமென்றிருந்த உற்சாகம் தமிழ் மக்களிடையே தற்பொழுது குறைந்துள்ளது. கடந்தமூன்று நான்கு வருடங்களாக, தமிழ் மக்கள் மத்தியில், பல்கலைக்கழகம் வேண்டுமென்ற ஆவல் குறைந்துள்ளது.

### கூட்டுறவு அதிகவளர்ச்சி

தமிழ் பகுதிகளில் கூட்டுறவு இயக்கங்கள் அதிகவளர்ச்சியடைந்துள்ளது. கூட்டுறவு சங்கங்களும் தமிழ் பகுதிகளில் கூடுதலாக இருக்கின்றன. ஆதலால் பல்கலைக்கழகம் நிறுவதற்கு நிதியுதவி அளிக்க வேண்டும். எமது வருங்கால சந்ததியினர், நல்ல கல்வி அறிவுபெற்று, இந்நாட்டில் சீரும் சிறப்புமாக வாழ வேண்மானல் நிச்சயம் தனி பல்கலைக்கழகம் நிறுவவேண்டும்.

### மூன்று பிரச்னைகள்

தமிழ்மக்களை எதிர்நோக்கி மூன்று முக்கிய பிரச்னைகள் இருக்கின்றன. இந்த மூன்று பிரச்னைகளுக்கு ஒரு முடிவு காணப்பட்டதால் தமிழ் இனம் நிம்மதியாக வாழ முடியும். வேலையில்லாத் திண்டாட்டம், தீண்டாமை, மொழிப்பிரச்னை ஆகிய மூன்றுமே தமிழ் மக்களின் பிரச்னைகள்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை கூட்டுறவின் மூலம் தீர்க்கலாம். விவசாயத்தால் மட்டும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது நாம் கைத்தொழிலிலும் கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கவழி காணலாம்.

### வேலைவாய்ப்புகள்

தென் மாகாணத்தில்மட்டும் தான் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும், வேலைகள் பெறலாம், பணம் சம்பாதிக்கலாம் என்று சொல்ல காது. பிரஜா உரிமையற்றிருக்கும் பத்து லட்சம் இந்தியர்களும் தாய்நாட்டிற்குச் சென்றபின் அங்கு நிலைமை மாறிவிடும். வேலைபெறக்கூடிய வசதி வடமாகாணத்திலும் உண்டு. தமிழ் பகுதிகள் கடலுக்கு அருகே இருக்கின்றன. ஆதலால் கடல்தொழில் மூலம் நமது வாலிபர்கள் வேலையிலலாத் திண்டாட்டத்தைக் குறைக்கலாம். அதே நேரத்தில் தமிழ் பகுதிகளின் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்யலாம். கடல் தொழிலில் ஈடுபடுவதால் அது குறைவென்று எவரும் கருதக் கூடாது. சாதி வேற்றுமையை மறந்து எல்லாரும் கடல் தொழிலில் ஈடுபட முன்வர வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் இதற்கு வழி அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இந்தியாவிலுள்ள கவர்னர் கிரி இங்குள்ள கூட்டுறவு வைத்தியசாலையைப் பாராட்டியே பேசியுள்ளார், ஆதலால் தமிழ்ப் பகுதிகளில் கூட்டுறவின்மூலம் மேலும் பயன்பெற வழிதேட வேண்டும்.

பழங்காலக் குறைபாடுகளை நீக்கி கூட்டுறவின்மூலம்பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். இப்பகுதிக்கு சிறந்த மின்சார வசதி செய்து தருவதாக காணி அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா வாக்குறுதியளித்துள்ளார். ஆதலால் மின்சாரத்தின் உதவியுடன் மேலும் பல கைத்தொழில்களை கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஆரம்பித்து பலருக்கு வேலைகொடுக்கலாம். கூட்டுறவின் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதோடு பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்யலாம்.

### சமூகத்தில் மாறுதல் வேண்டும்

தமிழ் மக்களிடையேயிருந்து தீண்டாமையை ஒழிக்காவிட்டால் தமிழ்மக்கள் முன்னேற முடியாது. இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக ஒருபகுதி மக்களை மிருகங்கள் போல நடாத்தி வந்தோம். விஞ்ஞானம் முன்னேறும் இந்த விஞ்ஞான உலகத்திலே உலக மாறுதலுக்கு ஏற்றபடி சமூகத்திலும் மாறுதல் ஏற்பட வேண்டும். சமூகத்தில் சிலர் படும் துன்பத்தை வேதனையை அறிந்தால் வெட்கப்பட வேண்டும். ஆதலால் தீண்டாமை பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

மலைநாட்டிலுள்ள தமிழ் மக்கள் இன்னும் இருபது முப்பது வருடங்களுக்குப் பின் தமிழ்ப் பகுதிகளில்தான் வந்து குடியேறுவார்கள். அவர்களை நாம் பிரித்து வித்தியாசம் காட்ட முடியாது. இயற்கையாகவே எல்லோரும் சமமாக பாவிக்கப்படுவோம். ஆதலால் அதற்குமுன் நாங்கள் மனம் மாறி நமமத்தியிலுள்ள சாதி வித்தியாசத்தை ஒழிக்கவேண்டும்.

மொழிப்பிரச்னை ஒரு நெருக்கடியான பிரச்னை. இப்பிரச்னையைத் தீர்ப்பதற்காகவே மந்திரி பதவியில் சேர்ந்தேன். தமிழ் பிரதேசங்களில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாக்குவதற்கும் தமிழ்மக்கள் இந்நாட்டில் மானத்துடன் மரியாதையுடனும் வாழ்வதற்குமே அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்தோம். தேசிய அரசாங்கம் விரைவில்மொழிப் பிரச்னையைத் தீர்க்கும் என்ற நம்பிக்கையுண்டு.

## தபால் விநியோகத்தில் மாற்றம்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்புப் பகுதிகளில் இனிமேல் தினம் ஒருமுறை தபால் விநியோகமே நடைபெறுமெனத் தெரிய வருகிறது. தற்பொழுது தினமும் இருமுறை விநியோகம் செய்யும் தபால் முறைகளை ஒன்றாக்குவதற்கான வழிவகைகளை தபால் அதிகாரி தயாரித்துக்கொண்டிருக்கிறர். எனத் தெரிய வருகிறது. இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் கொழும்பில் தினமும் நான்கு முறை தபால்கள் விநியோகம் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜயாறன்

### தூது

வரலாற்றிலேயே 'பென்ஸ்' கார் பரிசுபெற்றவரைப் பற்றித்தான் பேச்சு. 20 லட்சம் பேர்களில் பெரிய அதிர்ஷ்டசாலி ஓர் ஏழை என்பதை அறியப் பலருக்கும் திருப்தி

53 வயதுள்ள ஜான் பீரிஸ் என்ற அந்த அதிர்ஷ்டக்காரரைப் பேப்பரில் பார்த்தேன். அவர் ஒரு வான் டிரைவராம். கொழும்பு புறக்கோட்டையில் வேலைசெய்பவர். ஒரு மனைவியும், 6 குழந்தைகளும் உள்ளனர். மூத்த புதல்விக்கு 26 வயது. பாவம்! புத்திசுவாதீனமில்லையாம் அங்கொடை ஆஸ்பத்திரியிலிருக்கிறர், தன் தகப்பனுக்குப் பெரிய அதிர்ஷ்டம் வந்துள்ளதை அறிந்த பின்பாவது குணமாகக் கூடுமோ என்னவோ!

24 வயதுள்ள மற்றொரு பெண்ணுக்கு விவாகமாகியும், அவரும் வீட்டுடன் பீரிஸின் ஆதரவில்தான் இருக்கிறர். மற்ற நால்வரில் கடைசிப் பையன்தான் படிக்கிறர்.

* * *

தமக்கு, கார் வேண்டாமென்றும், பணப் பரிசாக 60 ஆயிரமும் பெற்று, தம் மூத்த பெண்ணுக்குச் சிகிச்சை செய்து, மற்ற பெண்ணுக்கு நல்ல இடத்தில் விவாகம் செய்துவைத்து, கடைசிப் பையனை நன்கு படிக்கவைக்க வேண்டுமென்று விருப்பம் தெரிவித்துள்ளார். ஆனால் அவரது மனைவியோ கார் தான் வேண்டுமென்று விரும்புகிறராம்.

தம் மனைவியின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யக் காரில் குடும்பத்துடன் கதிர்காமம் சென்று தரிசித்துவிட்டு, பின்னர் அதை விற்றுவிட அவர் உத்தேசித்திருக்கிறராம். ஓர் ஏழை அவ்வளவு மதிப்பு வாய்ந்த காரை வைத்துக் கொண்டு வேறென்ன செய்ய முடியும்? 85 ஆயிரத்துக்கும் அந்தக் காரை வாங்கச் சிலர் ஆவல்கொண்டிருக்கிறர்களாம். பணமிருக்கிறதோ, இல்லையோ என்று பலருக்குக் கவலை. அதிக பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் சிலருக்கு விசாரம்!

* * *

முன்னாள் மந்திரி இலங்கரத்ன பாவித்த பென்ஸ் கார் தான் இது. மந்திரி பதவியுடன், எம். பி. பதவியையும், காரையும் இழந்த அவருக்கு எப்படி இருக்கும்! அவரது நண்பர்கள் பலர் 789 ஸ்வீப் டிக்கெட்டுகள் வாங்கி அவருக்கு அனுப்பிவைத்தனராம். அதில் ஒன்றுக்குப் பரிசு கிடைத்திருந்தால் எப்படியிருந்திருக்கும். பாவம் அதுவுமில்லை. என்னுலும் இந்தக் கார் மூலம் அரசாங்கத்துக்கு நல்ல வருமானம்.

அடுத்தபடியாக இதைவிட நல்ல 'பென்ஸ்' கார் ஸ்வீப் பரிசாக அளிக்கப்பட இருக்கிறது. 80 லட்சம் டிக்கெட்டுகள் விற்பனையாகக் கூடும்! கிடைத்தால் கார் பரிசு கிடைக்கட்டும், போனால் 50 சதம் தான். அதுவும் சில நல்ல காரியத்துக்கு உதவக்கூடும் தானே!

* * *

கிறிஸ்தவரான பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயகாவும், பௌத்தரான என். கியூ. (நெவில் குவின்டஸ்) டயஸும், மல்வத்தை மகாநாயக தேரோவை நேரில்கண்டு இந்தியர்களாலும் தமிழர்களாலும் சிங்களவர்களுக்கு ஏற்படக்கூடிய "ஆபத்தைப்பற்றி" மகாநாயகரிடம் "விளக்கி"யுள்ளனர்.

யு. என். பி. யும் தமிழரசுக் கட்சியும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதால் தான் தேசிய அரசாங்கத்தை தாங்கள் கண்டிக்க நேரிட்டுள்ளதாயும் இந்த ஒப்பந்தம் இந்தியா—இலங்கை ஒப்பந்தத்துக்கும் மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கும் ஆபத்

(6-ம் பக்கம் பார்க்க)

# செவ்வாய்க்கிரகத்தில் மலைகள், பாலைவனங்கள்

## உயிரினம் இருப்பது குறித்து விஞ்ஞானிகளிடையே கருத்து வேறுபாடு

### "மரினர்-4" அனுப்பிய படங்கள் தொடர்ந்து வருகின்றன

கலிபோர்னியா, ஜூலை 18

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் இருக்கலாம் என்று இங்குள்ள அமெரிக்க விஞ்ஞானிகள் கருதியபொழுதிலும் "மரினர்—4" அனுப்பும் படங்களை நன்கு பரிசீலனை செய்யாத வரை தங்களது சஹறை நிரூபிக்க முடியாது என்று இங்குள்ள சில விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். "மரினர்—4" இதுவரை அனுப்பியுள்ள படங்களின்படி, செவ்வாய்க்கிரகத்தில் மலைகளும், பாலைவனங்களும் இருக்கின்றன என்றும் கால்வாய்கள் இருக்கக் கூடிய அறிகுறிகள் காணப்படவில்லையென்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தைப் படம் பிடித்து "மரினர்—4" அனுப்பிய படங்கள் பூமிக்கு வந்து கொண்டிருக்கின்றன. இன்று பகல் கிடைத்த செய்திகளின் படி "மரினர்—4" படம் பிடித்த ஆறாவது படம் பூமிக்கு வந்தடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

செவ்வாய்க் கிரகத்தை நோக்கி ஏவிவிடப்பட்ட "மரினர்—4" செவ்வாய்க்கிரகத்தைக் கடந்த பொழுது படங்களை எடுத்தது. சுமார் 20 படங்கள் எடுக்கப்பட்டிருக்கலாம் என இங்குள்ள விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். செவ்வாய்க் கிரகத்துக்கும் பூமிக்குமிடையே உள்ள தூரம் 13 கோடி மைல்களாகும்.

**அதிசய தகவல்கள்**

"மரினர்—4" பிடித்த படங்கள் யாவும் பூமிக்கு வந்தடைய மேலும் சுமார் பத்து நாட்கள் எடுக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை கிடைத்த படங்களிலிருந்து அதிசயமான தகவல்கள் கிடைத்திருக்கிறதென்று கூறிய விஞ்ஞானிகள் அது பற்றிய விளக்கங்களைத் தெரிவிக்க மறுத்து விட்டனர். பூமிக்கு வந்து கொண்டிருக்கும் படங்கள் செவ்வாய்க் கிரகத்தின் இரகசியங்களைத் தெளிவாகக் காட்டக் கூடியதாக இருந்தாலும் எல்லா படங்களும் வந்த பின்னரே சரியான தகவல்களைக் கூறமுடியுமென்று விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். முதலில் வந்த படங்களிலும் பார்க்க இப்பொழுது கிடைக்கும் படங்கள் தெளிவாக இருக்கின்றன என்றும் தொடர்ந்து வரும் படங்கள் இன்னும் தெளிவாக இருக்குமென்றும் இங்கு அறிவிக்கப்பட்டது.

**கருத்து வேறுபாடு**

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் உண்டா என்பதைக் கண்டுபிடிப்பதில்தான் விஞ்ஞானிகள் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இக்கூற்றுக்குச் சிலர் சாதகமாக இருந்தாலும் சில விஞ்ஞானிகள் எதிர்மாறாக இருப்பதால் செவ்வாயில் உயிரினம் உண்டா என்பது இன்னும் நிரூபிக்கப்படவில்லை.

## பேர்லின்—கெய்ரோ விமானப் பாதை

பேர்லின், ஜூலை 18

ஜூன் 22-ந் திகதி பேர்லின்—கெய்ரோ விமானப்பாதை வென்று திறக்கப்பட்டது. இன்று காலையில் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் "இன்டர்ப்ளக" விமான சேவையைச் சேர்ந்த விமானமொன்று இங்கிருந்து கெய்ரோவுக்கு பறந்து சென்றதின்மூலம் புதியசேவை ஆரம்பிக்கப்பட்டது. இடையில் இறங்காமல் இருநகரங்களிடையே ஒரே பாய்ச்சலில் பறந்து செல்லும். இப்புதிய விமான சேவை சர்வதேச விமான சேவைகளுடன் இணைக்கப்பட்டதாகும். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் பேர்லினிலிருந்தும், ஒவ்வொரு புதன் கிழமை கெய்ரோவிலிருந்தும் இந்த விமான சேவை நடைபெறும்.

## புகைவண்டி நவீனமயமாக்குதல்

பேர்லின்: ஜூலை 18

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் ரயில்வேயில் 800 000 ஊழியர்கள் சேவை செய்கின்றனர். ஆண்டு தோறும் ஜூன் மாதத்தில் நடத்தப்படும் 'புகைவண்டிச் சேவைத்தினத்தில்' ரயில்வே சிப்பந்திகள் பலருக்கும் உயர்தர அரசாங்கப் பட்டங்கள் வழங்கப்படும். 1964-ல் மட்டும் 680 000 டன் பொருட்கள் ரயில் மூலம் கொண்டு செல்லப்பட்டது. கடந்த யுத்தத்தின் போது 1000 ரயில் பாலங்களும் ஏராளமான ரயில்வே நிலயங்களும், ரயில்பாதைகளும் நாசமாக்கப்பட்டன. கடந்த 20 ஆண்டுகளில் அவை அனைத்தும் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டதுமன்றி ரயில் சேவையும் நவீனமாக்கப்பட்டு விட்டது. இன்று நாடு முழுவதும் வலை பின்னப்பட்டது போல ரயில் பாதைகள் அமைந்துள்ளன. பழைய எஞ்சின்களுக்குப் பதிலாக மின்சார எஞ்சின்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

## ஆபிரிக்க போராட்டத்துக்கு ஆதரவு

லண்டன், ஜூலை 18

காலனி முறையை எதிர்த்து ஆபிரிக்க மக்கள் நடத்தும் சுதந்திரப் போராட்டத்துக்கு ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு அளிக்கும் ஆதரவை தென்மேற்கு ஆபிரிக்காவின் ஐக்கிய தேசிய ஜனநாயக ஸ்தாபனத்தின் தலைவர் திரு புரும்பா கெரினு பெரிதும் பாராட்டினார். ஐ. நா. விசேடக் குழுவின் கூட்டம் அடிஸ் அபாபாவில் நடைபெற்று முடிந்ததும் திரு. கெரினு கூறியதாவது:

"ஆபிரிக்காவின் இலட்சியம் பற்றி இரு ஜேர்மனிகளுமுள்ள அடிப்படை கருத்து வேற்றுமையைப் பற்றி நம் உணர வேண்டும். யாராவது தென்மேற்கு ஆபிரிக்காவுக்கு இன்று விஜயம் செய்தால் இன்றும் அது ஒரு ஜேர்மன் காலனியாக இருப்பதை காண்பர். மேற்கு ஜேர்மனி தென்மேற்கு ஆபிரிக்காவை ஓர் இராணுவத் தளமாக்கியுள்ளது".

## பர்மாவுக்கு இராணுவ தூதுகோஷ்டி

ரங்கூன், ஜூலை 18

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசிலிருந்து ஓர் இராணுவத் தூதுகோஷ்டி உதவிப் பாதுகாப்பு மந்திரி அட்மிரல் வர்னர் தலைமையில் பர்மாவுக்கு விஜயம் செய்தது. தூதுகோஷ்டியினர் பர்மாவின் இராணுவ இலக்குகளை பார்வையிட்டனர். பர்மிய இராணுவ, அரசியல் தலைவர்களுடன் இருநாடுகளுக்கும் பயனபடும் பிரச்னைகள் பற்றி விவாதம் நடத்தினர். அவர்களின் விஜயம் இரு நாடுகளிடையே நேச உறவுகளைப் பலப்படுத்தி விட்டதென்று பர்மா வெளிவிவகார மந்திரி திரு. யூ தி ஹான் கூறினார்.

## புற்றுநோய் சிகிச்சையில் புது ஆராய்ச்சி

பேர்லின், ஜூலை 18

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் பேராசிரியர் மான்பிரட் ஆர்டென் உடலை அதிகமாக சூடேற்றுவதன் மூலம் புற்றுநோயைச் சுமாக்கும் ஒரு புதிய முறையைக் கண்டு பிடித்துள்ளார்.

ஆர்டென் சிகிச்சை நிலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொழில் நுட்ப சாதனங்களின் உதவியுடனும், ஏனைய கட்டுப்பாட்டுச் சாதன உதவியுடனும் செயற்கை முறைகள் மூலம் உஷ்ணத்தை 80—85 நிமிடங்கள்வரை உடலுக்கு தீங்கு ஏற்படாத முறையில் மனிதன் தாங்கிக்கொள்ளமுடியும் என்பதை டிரெஸ்டன் மருத்துவக் கல்லூரி பேராசிரியர் நிச்சட் கிர்ஷ் நிரூபித்துக்காட்டியுள்ளார். இப்பேராசிரியர் இலங்கைக்கும் விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் ஆர்டெனின் ஆராய்ச்சி மேற்கு ஜேர்மன், அமெரிக்கன் புற்றுநோய் சிகிச்சை நிலயங்களைச் சேர்ந்த வைத்தியப் பேராசிரியர்களின் ஆவலைத் தூண்டியுள்ளது. பேராசிரியர் ஆர்டென் தேசிய சர்வதேசப் பரிசுகளையும் பெற்றுள்ளார்.

## கமத்தொழில் மாணவர்களின் கருத்தரங்கம்

### இலங்கையும் கலந்தது

லீப்சிக், ஜூலை 18

ஜேர்மன் ஜனநாயகக்குடியரசின் 13-வது கமத்தொழில் பொருட்காட்சி நடைபெற்றதையொட்டி, வளர்ச்சிபெறும் நாடுகளின் மாணவர் கருத்தரங்கு ஒன்று லீப்சிக் நகரில் நடத்தப்பட்டது. லீப்சிப் பல்கலைக்கழக விவசாய வித்தியா பீடத்தின் ஆதரவில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இலங்கை, ஈராக், கினியா, இந்தியா, பர்மா, க்யூபா முதலிய நாடுகளைச் சேர்ந்த 30-க்கு மேற்பட்ட மாணவர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர். கருத்தரங்கை ஆரம்பித்து வைத்த வித்தியா பீட அதிபர் பேராசிரியர் ப்ரோவிச்பட்டினி, வறுமை சமுதாய முறையிலிருந்து ஏற்பட்டதேயன்றி இயற்கையாக ஏற்பட்டவையல்ல என்று கூறினர்.

## நீந்துவதில் மற்றோர் உலகசாதனை

லீப்சிக், ஜூலை 18

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசைச் சேர்ந்த 23 வயதான பிராங் வீண்ட்எனனும் இளைஞர் 1.60 நிமிடத்தில் 220 யார் நீந்தி ஓர் உலகசாதனையை நிலைநிறுத்தினர். இதற்கு முந்திய சாதனையை 2 நிமிடங்களில் ரொபர்ட் விண்ட்ல் (ஆஸ்திரேலியா) நிலைநிறுத்தியிருந்தார். பிராங் வீகண்ட் உலகில் நான்காவது சிறந்த நீச்சல் வீரராவர்.

## வடமாகாண அபிவிருத்தியில் எனக்கு அதிக அக்கறை உண்டு

### நெல்லியடியில் மந்திரி சில்வா

உடுப்பிட்டி, ஞாயிறு

"நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று மக்களுடன் பழகியிருக்கிறேன். எங்கு பார்த்தாலும் மக்கள் சுதந்திரத்தையே விரும்புகின்றார்கள். மிகவும் நல்ல சுபாவமுடையவர்கள்தான் இந்நாட்டு மக்கள் என்பதை நான் அறிவேன். இதனால்தான் சுதந்திரத்தைப் பாதுகாக்கக்கூடிய முறையிலான நடவடிக்கையை எடுத்திருக்கிறேன்".

நெல்லியடி மகாத்மா தியேட்டரில், தமக்களிக்கப்பட்ட வரவேற்பில், காணி மின்சார நீர்ப்பாசன அமைச்சர் திரு சி. பி. டி' சில்வா மேற்கண்டவாறு கூறினர்.

உடுப்பிட்டி எம். பி திரு எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இந்த வரவேற்புக் கூட்டத்தில் திரு. சி. பி. டி' சில்வா மேலும் கூறியதாவது:

உடுப்பிட்டித் தொகுதிக்கு வந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவரின் பேச்சுகளை நான் ரசித்து வருகிறேன்.

வடக்கு மாகாண அபிவிருத்தியில் எனக்கு அதிக அக்கறையுண்டு. அக்கறையையும் அதற்கடுத்த பகுதிகளிலுமுள்ள கஷ்டங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**மின்சாரத்தைப் பெருக்குவேன்**

மின்சாரத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. கன்னுகத்தில் 4000 வாட்டாக இருக்கும் மின்சார யந்திரம் வருட முடிவிற்குள் 14,000 வாட்டாக இருக்கும்.

வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கவேண்டுமானால் அது படித்தவர்களது முயற்சியினாலும் கைத்தொழில்களாலுமே தீர்க்க முடியும். இதை அறிந்துள்ள தேசிய அரசாங்கம் அத்துறையில் நடவடிக்கை எடுக்கிறது.

**கடுமையாக உழையுங்கள்**

நீங்கள் கஷ்டத்தைப் பாராமல் கடுமையாக உழைக்கக் கூடியவர்கள் என்பது எனக்குத் தெரியும். இதனால் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்படும் இயந்திரம் மூலம் ஆழமான கிணறுகளை வெட்ட முடியும். தென் இந்தியாவிலெல்லாம் 1000 அடிக்குக் கீழிருந்து தான் நீர் எடுக்கிறார்கள். ஆனால் 25 அடிக்குக் கீழ் எமது நாட்டில் என்ன இருக்கிறதென்பதே தெரியாமலிருக்கிறது. இதை நீடிக்க விடாமல் விரைவில் ஆராயவேண்டும்.

சுதந்திரமாக இந்நாட்டில் வாழவேண்டுமென்ற உங்களது அவா கடவுளது அருளால் நிறைவேறும்.

**உடுப்பிட்டி எம். பி. பேச்சு**

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசும் போது கூறியதாவது:

இந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் நிறுவப்பட்ட தேசிய அரசாங்கத்தின் அமைச்சராக வரவேற்பளிக்கின்றோம். 1956-ம் ஆண்டிலிருந்து தமிழ் பேசும் பிரதிநிதிகள் பாராளுமன்றக் குழுவில் அங்கம் வகித்தது கிடையாது. ஆனால் இன்றோ இந்த நிலைமை மாறியுள்ளது. திரு. டட்லி தலைமையில் தேசிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் கொள்கையில் அரசியல் நோக்கங்களுக்கான பல மாறுதல்கள் முறைகளாக ஏற்பட்டபோது, நீங்கள் அக்கட்சியை விட்டு வெளியேறினீர்கள்.

ஒருசாராருக்கு ஒருவிதியும் மற்றவர்களுக்கு வேறு விதியும் இருப்பதைக்காண தமிழர்கள் விரும்பமாட்டார்கள். பாராளுமன்றத்தில் நீதிமன்ற மசோதா கொண்டு வரப்பட்ட போது தாங்கள் தங்களது அபிப்பிராயத்தை தெரிவித்தீர்கள். இன்னும் சிறுபான்மையினர் பிரச்னைகளிலும் அபிப்பிராயம் தெரிவித்திருந்தீர்கள். ஆனால் அவைகளை பதவியிலிருந்த அரசாங்கம் ஏற்கவில்லை. ஏற்றிருந்தால் இன்று மற்றொரு நிலை ஏற்பட்டிருக்கும்.

**கைத்தொழிலில் அபிவிருத்தி**

எமது பகுதி வாலிபர்கள் வரண்ட பிரதேசத்தில் தான் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு வேறு தொழில் கிடைக்க முடியாத இந்நேரத்தில், விவசாயத்துக்கான, கைத்தொழில் சலுகைகளை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். விவசாயத்தை துரிதப்படுத்த திட்டங்களை தயாரிக்க வேண்டும்.

மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் திட்டத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டும். இதைச் செய்து முடித்தால், மகாவலி கங்கையின் நீர்பாய்வது, இருசமூகத்தினருக்கிடையே அன்பையும் வளர்க்கக் கூடியதாயிருக்கும்"

## பம்பாயில் பேய்மழை: ஒருவர் சாவு

பம்பாய், ஜூலை 18

பம்பாயிலும் சுற்றுப் புறங்களிலும் பலத்த மழை பெய்ததால் வீடொன்று இடிந்து விழுந்ததினால் ஒரு பெண் கொல்லப்பட்டார் என்றும், நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்தன என்றும், 5 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனரென்றும் அறிவிக்கப்படுகிறது.

## கிரேக்க பிரதமர் ராஜினாமா

ஏதென்ஸ், ஜூலை 18

கிரேக்க பிரதம மந்திரி திரு பாபண்ட்ரியோஸ் ராஜினாமாச் செய்துவிட்டார். மன்னருடன் கொண்ட அபிப்பிராயபேதம் காரணமாக இந்த ராஜினாமா இடம் பெற்றது. இதைத் தொடர்ந்து ஏதென்ஸில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 100 பேர் கைது செய்யப்பட்டனர். அரண்மனையைச் சுற்றி பலத்த காவல் போடப்பட்டுள்ளது.

## ஆயுத உதவி

ராவல்பிண்டி, ஜூலை 18

ஆயுத உதவிகள் பெறும் பொருட்டு இந்திய தூதுகோஷ்டியொன்று இங்கிலாந்துக்கு விஜயம் செய்திருப்பதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 80,000 அமெரிக்க துருப்புகள்

சைகோன், ஜூலை 18

வடக்கு வியட்னாமில் அமெரிக்க விமானங்கள் நேற்று தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தின.

வடக்கு வியட்னாம் மீது பறந்த 5 அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாக சீன செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

தென் வியட்னாமில் தற்பொழுது 80,000 அமெரிக்க துருப்புகள் இருக்கின்றன.

# "முறையிடச் சென்ற எங்களைத் தாக்கினர்"

## இயக்கச்சி இராணுவத் தாக்குதல் வழக்கில் சாட்சியம்

சாவகச்சேரி, ஞாயிறு

"கடந்த வருடம் ஜூலை மாதம் 5-ம் திகதி தாளையடியில் இயக்கச்சி இராணுவத்தினர் நடாத்திய அட்டூழியம் பற்றி பளை பொலிஸ் நிலையத்தில் முறையிட நானும் வேறு நால்வரும் என் எஸ் ஆர் ஜீப்பில் சென்றோம். பொலிஸ் நிலையத்தில் எமது முறைப்பாட்டைப் பதிவு செய்த பின்னர் பொலிஸ் சார்ஜன்ட் எம்மை அந்த ஜீப்பில் இயக்கச்சி இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்றார். ஜீப்பை இராணுவ முகாம் சேற்றடியில் நிறுத்தி விட்டு உள்ளே போய் ஒருவரோடு கதைத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது கேற்றடியில் நின்ற இராணுவகாவல்காரர் எங்கள் ஜீப்பிற்குக்கிட்ட வந்து எ னிடம் ஏன் வந்தது என்று கேட்டார். அதற்கு நான் இராணுவத்தினர் தாளையடியில் எங்களை அடித்துத் துன்புறுத்தியதைவிட்டு இங்குள்ள பெரியவருக்கு முறையிட வந்ததாகச் சொன்னேன். உடனே அவர் "மீசைக்காரன் நீ தாளையடி சண்டியனோ!" என்று கேட்டார். நான் ஒன்றும் கூறவில்லை மீண்டும் அவர் "அமிர்காரயா-அம்மட்டக்காரயா" என்று சொல்லிக் கொண்டு கையிலிருந்த தடியால் என் வாயில் இடித்தார் உடனே எனது கொண்டியிருந்து இரத்தம் வீறிட்டுப்பாய்ந்தது. அவர்தான் இந்த வழக்கில் இரண்டாவது எதிரி.

இவ்வாறு இயக்கச்சி இராணுவ முகாமைச்சேர்ந்தவர்கள் ஆறு இராணுவத்தினர் மீது பளை பொலிஸ் சார்ஜன்ட் வி. சீனிவாசகம் தாளையடி கிராமவாசியான வி. ராஜநாயகம், பி ஸ்ரான்ஸ்லாஸ், சி எம், ஜோசப், டபிள்யூ ஏ ஜூலியன் பெர்ணான்டோ, தாளையடி கிராமசபைத் தலைவர் முதலையா ஆகியோரையும் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடித்திட்டமிட்டு வழிமறித்துத் தடியாலும், கைகளாலும் தாக்கிக் காயம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வி ஜராஜ் நாலாவது சாட்சியமளிக்கையில் கூறினார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு கே வி. எஸ். சண்முகநாதன் திரு சி பாலசிங்கம் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"ஐந்து நிமிடங்களின் பின்னர் ஜீப்பிற்குத் திரும்பிவந்த பொலிஸ் சார்ஜன்டிடம் இராணுவக் காவல்காரர் அடித்தது பற்றிக்கூறினேன். அவர் திரும்பி போவோம்" என்று சொல்லி ஜீப்பில் ஏறினார். ஜீப் இராணுவ முகாமைவிட்டு பிரதான வீதியை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் 400 யாருக்கப்பால் இரண்டு இராணுவ வாகனங்கள் வீதியின் மத்தியில் நிற்பாட்டப்பட்டிருந்ததைக் கண்டேன். அந்த இடத்திற்குச் சென்று ஜீ நின்றதும்பற்றைக்குள் இருந்து இராணுவத்தினர் ஓடி வந்து உள்ளே இருந்தவர்களை இழுத்து அடிக்கத் தொடங்கினார்கள்

### இழுத்துச்சென்று அடித்தனர்

என்னை அவர்கள் பற்றைக்குள் இழுத்துச்சென்று அடித்தமையால் மற்றவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. 15 நிமிடங்களின் பின் அவர்கள் என்னை விட்டனர், நான் நடந்து பிரதான வீதியை நோக்கிச் செல்லுகையில் வழியில் முதலையா கிடப்பதைக் கண்டேன். அவரோடு அருகே நின்ற இராணுவ வீரரிடம் அவரை விட்டுவிடும்படி கேட்டேன். அவர் மறுத்ததும் நான் பிரதான வீதியை அடைந்து அங்கிருந்து எமது ஜீப்பில் பளை பொலிஸ் நிலையத்திற்குச் சென்றேன்".

### குறுக்கு விசாரணை

எதிரிகளின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தார். அப்போது சாட்சி கூறியதாவது:

"7-7-64-ல் இயக்கச்சி இராணுவ முகாமில் நடைபெற்ற ஆள் அடையாள அணிவகுப்பில் இராணுவ முகாம் கேற்றடியில் என்னைத் தாக்கியவரை அடையாளம் காட்டினேன். அவர்தான் 2-ம் எதிரி அவர்கள் என்னைத் தாக்கியவுடன் வேறு ஒரு இராணுவ வீரர் வந்து உள்ளே அழைத்துச் சென்றமையால் அவரை பொலிஸ் சார்ஜன்டிற்குக் காட்ட முடியவில்லை'.

சாட்சி நீதிபதியின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் வீதியில் குறுக்கே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் நிறம் இராணுவ வாகனங்களினது நிறம் போன்றதே என்றும், எங்களைத் தாக்கிய ஆட்கள் இராணுவத்தினர் ஓய்வின் போது அணியும் பெனியனும் ஓட்டத்திற்கான கட்டைக் காற்சட்டையும் அணிந்திருந்தமையாலும் அவர்களை இராணுவ முகாமிற்கு உள்ளே நின்றமையாலும் அவர்களை இராணுவத்தினர் என்று கருதினேன் என்றும் கூறினார்.

மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

# சோலைவரி அறவிட முடிவு

கொடிகாமம், ஞாயிறு

கொடிகாமப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு மூலதனப் படியாக சோலைவரி அறவிடுவதென திரு. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கச்சாய் கிராமசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மின்சாரம் பெறும் விஷயமாக ஸ்தலஸ்தாபன மந்திரி செனட்டர் திரு. எம். திருச்செல்வத்தைப் பேட்டிகாண அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு தூதுகோஷ்டியும் இக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

1-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஆ. கனகரத்தினம் உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இவரின் பெயரை திரு. எஸ். கே. செல்லையா பிரேரிக்க திரு பொ. கனகரத்தினம் ஆமோதித்தார்.

# உலக சமாதான காங்கிரஸ் விசேட தபால் தலை

பெர்லின், ஜூலை 18

இன்று முதல 10-ம திகதி வரை பின்லாந்துத் தலைநகரான ஹெல்சிங்கியில் உலக சமாதானக் காங்கிரஸ் நடைபெறுவதை முன்னிட்டு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு இருவிசேட தபால் தலைகளை வெளியிட்டுள்ளது. நான்கு புறுக்கள் நான்கு திசைகளிலிருந்து புறப்பட்டு உலகை நோக்கிப் பறப்பதும், பின்னணியில் தேசியக் கொடியும் இத்தபால் தலைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

---

# 'தமிழினம் வளர்ச்சிபெறாததற்கு ஊக்கமின்மையே காரணம்'

## வள்ளுவர் விழாவில் பேச்சு

கோண்டாவில் விச.

"இன்றைய இளைஞர்கள் தான் எதிர்காலத்தைச் செப்பனிடும்சிற்பிகள். பழம்பெரும் கூறும்உண்மைகளையும்கற்றோர் கருத்துக்களையும் மனதில் கொண்டு எங்களுக்கு வழிகாட்டிச்சென்ற பெரியோர்களுக்கு இக்கால இளைஞர்கள் விழா எடுத்து வருவார்களானால் இந்துசமயம் வளர்ச்சியுறும் இந்துசமயம் மேலும் வளர்ச்சியுறவேண்டுமானால் நாட்டின் பல்வேறு இடங்களிலும் இந்து இளைஞர்கள் இந்துசமய வளர்ச்சி மன்றங்களை அமைத்து அதன் மூலம் செயலாற்றவேண்டும்" என்று இணுவில் இந்து இளைஞர்சங்கம் இணுவில் சிவகாமிஅம்மன் கோவில் முன்றிலில் நடாத்திய வள்ளுவர்விழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ இரத்தினம் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—"குளம் குட்டைகளிலுள்ள நீர் உயர உயர அதில் பூத்திருக்கும் பூவினுடைய தண்டு மேலே உயர்ந்து வருவதுபோல் மக்கள் உள்ளத்திலே ஊக்கம் வளர வளர அதன் பயனாக உயர்ச்சியும் அடையமுடியும். பாதையின் நடுவேயுள்ள சேற்றில் வழுக்காமல் நடப்பதற்கு ஊன்றுகோல் எவ்வாறு பயன்படுகிறதோ அதேபோல் வாழ்க்கையில் வழுக்கி விழாமல் இருக்க மக்கள், ஊன்றுகோலாகிய திருக்குறளைக் கற்றுணரவேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஓர் ஸ்திரமான வாழ்க்கை நடாத்தவேண்டுமானால் தோல்வியைக்கண்டு ஏங்காது ஊக்கமுடையவர்களாகவும், எதையும் செய்யமுடியாதென்ற உணர்வை அறவேயொழித்து வாழவும் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழினம் இன்று வளர்ச்சியடையாததற்குக் காரணம் ஊக்கமின்மைதான்.

அண்மையில் திருக்குறளை மொழிபெயர்த்த ஜெர்மன் நாட்டினர் திருக்குறள் போல் சிறந்த நூல் உலகத்தில் வேறொன்றும் இல்லையென்று கூறினார்கள். இன்று நம்நாட்டில் திருக்குறளை பல மொழிகளிலும் பெயர்ப்பதற்கு வேண்டிய பண உதவியளிக்க மக்கள் முன்வருவதில்லை.

வித்துவான் வேல்மாறன் பேசுகையில், "திருவள்ளுவர் ஒரு காவியத்தையோ அல்லது இதிகாசத்தையோ படைக்கவில்லை. அவர் வாழ்க்கையைப் படைத்திருக்கிறார். எப்படி வாழவேண்டும் எதைக்கடைப்பிடிக்கவேண்டும் என்றெல்லாம் தம் திருக்குறளின் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார். திருக்குறள் வாழ்க்கையின் ஓர் இலக்கணம் என்று கூறுவதில் வியப்பில்லை. திருக்குறளை ஒவ்வொருவரும் தமது வீட்டில் வைத்தும் போற்றவேண்டும். திருக்குறள் இல்லாத வீடு தமிழினத்திற்கு உழைக்கும் வீடாக அமையமாட்டாது" என்று கூறினார்,

மற்றும் திரு. நடராசா, இ. மகாதேவா, புதுமைலோலன் ஆகியோரும் பேசினர். விழாவிற்கு திரு. கா. சிவக்கொழுந்து தலைமைவகித்தார். விழாவில் நாடகங்கள் இடம்பெற்றன.

---

## வெள்ளம்

லண்டன், ஜூலை 1[illegible]

மேற்கு ஜெர்மனியில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் வீடிழந்துள்ளனர்.




குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

நேத்திராலோகதைலம்

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

**தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.**

[illegible] தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள சகல சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்த விற்பனவு உரிமையாளர்:

யாழ்ப்பாணம்: எஸ். சுப்பிரமணியம் அன் கோ.
53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

கரவெட்டி: நடன முருகன் மருந்துச்சாலை,
நெல்லியடி, கரவெட்டி.

★



டப்ளியூ. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்,
161, நோரிஸ் ரோடு,
கொழும்பு-11.






திரீ கொயின்ஸ்

சந்தேகத்திற்கே யிடமில்லாத உன்னத லாகர்.

உலகத்திலேயே சிறந்த மோல்ற — ஹொப்ஸ் ஆகியவையும் இலங்கையின் மிகச் சுத்தமான தண்ணீரும் கொண்டு, மதுத்தொழிலின் உயர்ந்த தரங்களுக்கமைய முறைப்படி வடிக்கப்பட்டு, பக்குவப்படுத்தப்படுகிறது திரீ கொயின்ஸ்.

குளிர்ந்த திரீ கொயின்ஸ் லாகரைப் பரிமாறி உங்களையும் உங்கள் விருந்தினரையும் கௌரவியுங்கள். அது அதிசயிக்கத்தக்க திருப்தி தருவதாக காணப்படும்.

மெக்கலம் புறூவெறிஸ் (சிலோன்) லிமிடெட்

வினியோகஸ்தர்கள்:- ஷாவலாஸ் அன் ஹெட்ஜஸ் லிமிட்டட், கொழும்பு 3

# ஒழுக்கம், பண்பை கற்பிப்பது விளையாட்டுப் போட்டிகளே

## மாவட்ட நீதிபதி கருத்து

சுழிபுரம், ஞாயிறு

மாணவர்களுக்கும் ஒழுக்கம் பண்பு ஆகிய நற்பண்புகளை விளையாட்டு போட்டிகள் கற்பிக்கின்றன. வெற்றி தோல்வி இரண்டையும் சமனாக உபயோகித்து தமது கடமையைச்செய்பவன்தான் உண்மையான வீரனாவன்" என்று பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வருடாந்த விளையாட்டு போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துல்காதர் பேசுகையில் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு. என். வேலுப்பிள்ளை விழவுக்குத் தலைமை தாங்கினார்.

நீதிபதி அப்துல்காதர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"புத்தகப்படிப்புப் பெற்றவர்கள் எல்லோரும் உத்தியோகம் பார்க்கலாம் என எண்ணுவதும், காத்திருந்து காலத்தைப் போக்குவது மிகவும் தப்பாகும். நாம் செய்யும் எத்தொழிலுக்கும் மதிப்புக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் அதன் மேன்மை மேலும் சிறப்படையும். செய்யும் தொழிலால் உயர்வு தாழ்வு காட்டப்படக்கூடாது. பிள்ளைகள் தமது இளம் பராயத்திலேயே நல்ல பக்திமான்களாவும் திடகாத்திர உள்ளவர்களாவும் வளர வேண்டும்."

சேர, சோழ, பாண்டியன் ஆகிய இல்லங்களுக்கிடையே போட்டிகள் நடைபெற்றன. சோழ இல்லம் முதலாவது இடத்தையும் சேரன் இல்லம் இரண்டாவது இடத்தையும் பாண்டியன் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு நீதிபதி எம். எம். அப்துல்காதர் பரிசில்களை வழங்கினார்.

# "தொழில் துறையில் நாட்டம் செலுத்துவதே நல்லது"

## விளையாட்டுப் போட்டியில் மாவட்ட நீதிபதி அப்துல்காதர்

மட்டுவில், வெள்ளி

"உத்தியோகம், உழைப்பு, பணம் இவைகளைவிட வாழ்வில் பண்பே பெரிதாகக் கருதப்படவேண்டும். நற்பண்புகளை உருவாக விளையாட்டுக்கள் பெரிதும் உதவுகின்றன. பிள்ளைகளுக்கு விளையாட்டு இயற்கையேயெனினும் அவை கட்டுப்பாடுக்கமைய நடைபெறும்போதுதான் அவை பயனுடைத்தாகிறது. நம் நாட்டவர் இன்று நமது மூதாதையரின் நாட்டு உணவு வகைகளையும் விட்டுப் பட்டண உணவு வகைகளையும் விட்டு இரண்டும்கெட்டான் நிலையான உணவுகளை உண்பதன் பலன் சமாதானமில்லாமல் வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலை மாறவேண்டும். உத்தியோகம் ஒருசிலருக்குக் கிடைக்கலாம். அதற்காக எல்லோரும் ஆசை கொண்டு ஏமாற்றமடைவதைவிட பெற்றோரின் தொழில் துறையில் உதவி அவற்றை நாடிச்செல்வது நல்லதாகும்."

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு எம். எம் அப்துல்காதர் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்கு தலைமைவகித்து உரை நிகழ்த்துகையில் கூறினார்.

மூன்று இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் மொத்தம் இருநூற்றி ஐம்பத்தொன்றரை புள்ளிகளைப் பெற்ற காந்தி இல்லம் முதலிடத்தைப்பெற்றது.

கந்தர், விவேகானந்தர் இல்லங்கள் 221,166 1/2 புள்ளிகளைப் பெற்று முறையே இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றன.

### பரிசுபெற்றோர் விபரம்

குழந்தைகள் பிரிவு:- 50 யார் ஆண் ஆர். அசோக்குமார் 50 யார் பெண் கே. தமயந்தி 75 யார் ஆண் ரி. சிவராசா, 75 யார் பெண் கே. மங்கையற்கரசி.

நீளம் பாய்தல் ஆண் பி. சந்திரகுமார் பெண் இ. கலாவதி

உயரம் பாய்தல் ஆர். சின்னத்தம்பி ஒரு மைல் ஓட்டம் கே. கணேசன்

### சாம்பியன்கள்

கீழ் பிரிவு ஆண்: எஸ். வரதலிங்கம் பெண் எஸ். கணேசமலர் மத்தியபிரிவு: ஆண் எஸ். சற்குணநாதன், பெண் கே. ஜானகி மேற்பிரிவு: ஆண் எம். இராஜேந்திரா, பெண் எஸ். இந்திராதேவி, விசேட பிரிவு முதல்வன் எஸ். இராஜேந்திரன் முதல்வி கே. புனிதம்மா

— —

# இரு ஜெர்மனிக்கும் ஐ.நா.வில் சம பிரதிநிதித்துவம்

நியூயோர்க், ஜூலை 18

இரு ஜெர்மன் ஜனநாயகங்களின் பார்வையாளர்களை ஐக்கியநாடு சபையில் அனுமதிக்காமலிருப்பதற்குக் காரணமில்லை என்று ஐ. நா.வின் 19-வது பொதுச் சபைத் தலைவரும் கானா வெளிவிவகார மந்திரியுமான திரு அலெக்ஸ் கிலன் சாக் நியுயோர்க்கில் கருத்து தெரிவித்துள்ளார். அவரது கூற்றை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பிரதிநிதிபொருவர் இங்கு வரவேற்றார்.

இதுபற்றிய ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் கொள்கையை விளக்கிய அந்தப் பிரதிநிதி இரு ஜெர்மன் ராஜ்யங்களும் உலக ஸ்தாபனத்தில் உறுப்பினர்களாக வேண்டும் என்று குறிப்பிட்டார். தற்போது இது சாத்தியமில்லையேல் இரு ஜெர்மனிக்கும் ஐ. நா.வில் சமபல பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமெனவும் வற்புறுத்தினர்.

# கடும் வரட்சி

## கால்நடைகள் இறக்கின்றன

பருத்தித்துறை, ஞாயிறு

கரவெட்டிப் பகுதியில் ஏற்பட்டுவரும் கடும் வரட்சியால் அங்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு பெருமளவில் அதிகரித்து வருவதாகத்தெரிய வருகிறது.

கால் நடைகளுக்கு மேய்ச்சல் தரைகளில் புல் பூண்டுகள் இல்லாததுடன் குளங்களும் வறளிவிட்டதால் ஒருவகை நோயால் அவை பீடிக்கப்பட்டு வயல் வெளியில் இறந்து விடுவதாகவும் கூறப்படுகிறது.

தில்லையம்பல பிள்ளையார் ஆலயத்தை அடுத்த வயல் வெளிகளில் சில தினங்களுக்கிடையில் பத்துக்கும் அதிகமான பசுக்கள் இறந்துகிடக்க காணப்பட்டதாம்.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

856, கே. கே. எஸ். வீதியில் கவலர் சந்திக்கருகாமையில் இரண்டு பரப்புக்காணி மாடிவீட்டுடனும் இரு மலசலகூடங்களுடனும் பைப் வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. நேரில் வந்து பார்வையிடவும். 668

மருதனார்மடம் - மானிப்பாய் வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: புறக்டர் பி. நாகலிங்கம், உடுவில், சுன்னாகம். 664

கல்லூர் தெற்கு ஆலும் வட்டாரம் முதலியார் ஒழுங்கையில் ஏலாமி இலக்கத்திலுள்ள மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு — எம். வேலுப்பிள்ளை, இல: 6, முதலியார் ஒழுங்கை, கல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம். 666

### தேவை

கடிகாரங்கள் திருத்துவதில் திறமை மிக்க மெகானிக் ஒருவர் தேவை. வயது 40க்கு மேற்படக்கூடாது. நேரில் வரவும் ஜுஜா ஸ்டோர்ஸ், சங்கானை. 665

பரந்தன் இரசாயன ஊழியர் கூட்டுறவு கன்ஜேசுச் சங்கத்திற்கு அனுபவமுள்ள சமையல்காரர் தேவை அனுபவத் திற்கேற்ற சம்பளம் வழங்கப்படும். 23-7-65க்கு முன் பகல் நேரங்களில் பரந்தன் சோடாத் தொழிற்சாலைச் சிற்றுண்டிச் சாலையில் நேரில் விண்ணப்பிக்கவும்: தலைவர். 667

வெல்டர்ஸ் தேவை. விண்ணப்பதாரர்கள் ரூ 250/- பணமாகப் பிணைப்பணம் செலுத்தவேண்டும். ஜவ்வர்ஜி பிரதர்ஸ் 150 சென்ற்ஜோசேப் வீதி, கிருண்ட்பாஸ என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 623

கடைச்சல் தொழிலாளர்கள் தேவை. வயது 30க்குள். முதல் தரமான கொம்பனியில் குறைந்தது 10 வருட அனுபவம். பிணைப்பணம்: ரூ 150/- பணமாகச் செலுத்தவேண்டும். ஜவ்வர்ஜி பிரதர்ஸ், 150, சென்ற் ஜோசப் வீதி, கிருண்ட்பாஸ் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 662

போட்டோஸ்ரற் (PHOTO-STAT) எஸ். எஸ். ஸி. (SSC) பத்திரம், பிறப்புப் பத்திரம் முதலியவற்றின் மாதிரிப் பத்திரங்களை (Copies) போட்டோஸ்ரற் மூலம் பெற்றுக்கொள்ளுங்கள். 16, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம். 656

உரும்பிராயில் இருந்த சித்த ஆயுர்வேத டாக்டர் S. A. இராசையா L I M. ஆவணி முதல் நல்லூர் டொமினி ஜோ 174 இல் வீட்டில் வசிப்பார். வைத்தியம் செய்யவேண்டியவர்கள் கலந்து கொள்ளலாம். 657

# 'கல்வி வளர்ச்சிக்கு விளையாட்டுப் பேட்டி அவசியம்'

— எம். பி.

## கோப்பாய் தமிழ்ப் பாடசாலை போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

"மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு விளையாட்டுப் போட்டி அவசியம் எல்லா மாணவர்களும் ஒரு இடத்தில் கூடி ஒன்று கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ள முடிகிறது. இந்த விளையாட்டுப் போட்டியைப் பார்த்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் கோப்பாய் தொகுதியிலுள்ள எல்லாப் பாடசாலைகளும் இம் மாபெரும் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டமை புதியதொரு உற்சாகத்தை ஊட்டுவதாகும்" மேற்கண்டவாறு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கோப்பாய் வட்டாரத் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டியில் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு சி. கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டார்.

வலி-கிழக்கு தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரம் சபையோரை வரவேற்று பேசியதைத் தொடர்ந்து இவ்விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற முயற்சித்தவர் விளையாட்டுப் போட்டிச் செயலாளர் திரு. ம. க. நடராசா அவருக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் மிகமிகவும் நன்றியுடையவர்களாதல் வேண்டுமெனவும் கூறினர்.

பிரதம விருந்தினரான பாடநூல் சபை ஆலோசகர் திரு ஏ. அருளையா பேசும்போது "கோப்பாய் வட்டாரத்திலுள்ள ஆசிரியர்கள் மாணவர்கள் இப்படியான விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளில் என்றுமே முன்னின்று உழைப்பவர்கள் இவ்விடம் நடைபெற்றிருக்கும் ஒழுங்கு முறைகளைக்கவனிக்கும் போது விளையாட்டுப் போட்டிக் காரியதரிசியைப் பாராட்டாமல் இருக்க என்னால் முடியவில்லை" என்றார்.

திருமதி லீலாவதி அருளையா பரிசில்களை வழங்கினர். 3 வருடம் தொடர்ச்சியாக அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலைக்கு உரும்பிராய் திரு. வ. நடேசலிங்கம் வெற்றிக்கிண்ணம் உரிமையாக அளிக்கப்பட்டது.——

வெற்றிக் கிண்ணங்களைப் பெற்ற பாடசாலைகளும், புள்ளியட்டவணையும், வெற்றி வீரர்களும்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை 1-ம் இடம ஆண்-பெண் 80 புள்ளி, அச்சுவேலி செங்கிரேசா 1-ம் இடம் பெண் 50 புள்ளி, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை 1-ம் இடம் 62 புள்ளி, வளலாய் அமிதக பாடசாலை 2-ம் இடம் ஆண்-பெண் 67 புள்ளி. புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாசாலை 3 ம் இடம் ஆண் பெண் 50 புள்ளி.

### வெற்றி வீரர்

புத்தூர் கலைமகள் ஆவரங்கால் மெதடிஸ்த பாடசாலை மே பி ஆண், தமிழ்க்கலவன் அச்சுவேலி செங்கிராசா வித்தியாசாலை மே பி பெண், தா செல்வநாயகம் வளலாய் அமிதக பாடசாலை ம பி ஆண், பி மேரி ரொயலா அச்சுவேலி செங்கிரேசா ம பி


(6-ம் பக்கம் பார்க்க)

# நியமனங்கள்

வம்பலப்பிட்டி, ஞாயிறு

புதிய கிபு. விக்கனைகள் நிருவாகிகள் பி. நவரத்தினராஜா, சி. ரெங்கநாதன், ஏ. சி. எம். அமீர், ஏ. சி. குணரத்தின எஸ். பெரேரா, வி. ஜெராங்கிலாஸ், ஜி. சமரவிக்கிரம, வி. தென்னகோன் ஆகியோர் மாஜிஸ்திரேட்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்


# ராதா குரு தைலம்



240,வியாதிகளுக்கு மகா சஞ்சீவி

தலையிடி, ஜலதோஷம், கபாலஇடி வயிற்றுவலி, புல்வலி, விஷக்கடி இருமல், நெஞ்சுச்சளி, வாதம் வலிப்பு, ஜன்னி, வாய்வுப்பிடிப்புகள் முதலிய சகல வியாதிகளுக்கும் சிறந்தது.

எஸ். சுப்பிரமணியம் அன் கோ

160, செட்டியார் தெரு, கொழும்பு.

53, கே. கே. எஸ். றோட், (போன்:541) யாழ்ப்பாணம்.




# மாவட்ட பாட்மின்டன் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

பாடசாலைகள், விளையாட்டுச் சங்கங்களுக்கிடையே பாட்மின்டன் சுற்றுப் போட்டிகளை நடத்த யாழ்ப்பாணம் மாவட்ட பாட்மின்டன் விளையாட்டுச் சங்கம் முடிவு செய்துள்ளது.

இப்படியான சுற்றுப்போட்டிகள் இம்மாவட்டத்தில் நடைபெறுவது இதுவே முதற் தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இச்சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளும் விளையாட்டுச் சங்கங்களும் கலந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு விளையாட்டுப் போட்டியும் மூன்று ஒற்றையர் ஆட்டங்களையும் இரண்டு இரட்டையர் ஆட்டங்களையும் கொண்டிருக்கும் இந்த விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் இம்மாதம் 22ம் திகதிக்கு முன்னர் விளையாட்டுச் சங்க காரியதரிசி திரு. அன்ரன் பிலிப்புடன் தொடர்பு கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

S. R. S.
ஜவுளி மாளிகை
எமது சொந்த கைத்தறிகளில் தயார் செய்யப்பட்ட
★ சேலைகள்
★ வேட்டிகள்
★ சால்வைகள்
★ துவாய்கள்
★ பெற்சீட்டுகள்
முதலியன எப்பொழுதும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
உள்ளூர் உற்பத்திப் பிடவைகளை வாங்கி வாழ்க்கைச் செலவை குறையுங்கள்!
எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்
போன்: 296.

REGAL - JAFFNA
NOW SHOWING
SWEET NIGHTS
(Eastman Colour)
(Adults only)

## முதற்பரிசு

குரும்பசிட்டி, ஞாயிறு

யாழ். மேற்குப் பிரிவில் அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கூட்டுறவு வகையில் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து முதல் ஸ்தானம் வகிப்பதால் முதல் பரிசான வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டது. மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவாளர் தின இறுதி விழாவில் உள்ளூராட்சி அமைச்சரின் பாரியார் திருமதி புனிதவதி திருச்செல்வம் இப்பரிசை மேற்படி சங்க நிர்வாகியிடம் வழங்கினார். இப்பிரிவில் சுமார் 150 கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மகத்தான 3வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) மொடேர்ன் (பதுளை)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)
என். டி. ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த




லவகுசா
(முழுநீள கலர்ப்படம்)
உலகம் போற்றிப் புகழும் இராமாயண காவியத்தின் திகழ்க்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!

## கல்வி வளர்ச்சிக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண், வெ கதிர்காமநாதன் வளலாய் அ மி பாடசாலை த க பாடசாலை சீ பி ஆண், செள பரமேஸ்வரி புன்னாலைக் கட்டுவன் அ மி த க பாடசாலை சீ பி பெண், சோ இராசகுலம் புத்தகட்டி விக்னேஸ்வர வித்தியாசாலை சீ பி பெண், ஸ்ரீ ரதி புன்னாலைக்கட்டுவன் அ மி த க பாடசாலை பா பி பெண், வ திருமலை அ மி பி க பாடசாலை, க வசந்தா அச்சுவேலி சரஸ்வதி அ மி த க பாடசாலை, வே கதிர்காமநாதன் அருணாசலம்.

## [illegible]

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகுமென்றும் பீலிக்ஸ் பயமுறுத்தியுள்ளார்.

மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலம், வர்த்தகம் கைத்தொழில் எல்லாம் அநேகமாக தமிழர் கைக்கே மாறியுள்ளதாக பீலிக்ஸ் கூறி, கதிர்காமம் உள்ளிட்டு நீர்கொழும்பு வர்த்தகம் கைத்தொழில் இவற்றிலே தமிழரே ஆதிக்கம் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். இவர் கூறியதை மகாநாயகா அவர்கள் ஒப்புக்கொண்டதாக பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

சர்வ சமய சமரசத்தை ஆதரிக்கும் மகாநாயகா மனதிலே இந்திய, தமிழ் துவேஷ விதையை விதைக்க பதவி இழந்த இரட்டை 'டயஸ்'கள் செய்துள்ள இம்முயற்சி ஆபத்தானது. தேசிய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும், சிறப்பாக தமிழ்த் தலைவர்களும் மகாநாயகாவை நேரில் கண்டு தங்கள் நிலைமையை விளக்கி, வகுப்புத் துவேஷவிஷத்தை நீக்க ஆவன செய்யவேண்டியது அவசரமும் அவசியமுமாகும்.

• • •

வானானை மனத்தானை மனைத்துள் நின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத், தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச் சுடர்திகழ் கட் சடையானைத் தொடர்ந்து நின்றென், தாயானைத் தவமாய தன்மையானைத் தலையாய தேவாதி தேவர்க்கென்றும், சேயானைத் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்

## பருத்தித்துறையில் லெஸ்லி

பருத்தித்துறை ஞாயிறு

இலங்கை சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. லெஸ்லி குணவர்த்தனா நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு விஜயம் செய்தார். கட்சிப் பிரமுகர்களில் ஒருவரான விழுக்கதிரர் திரு ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்ற சமசமாஜ வாலிப முன்னணிக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

## வீடு தீப்பற்றியது

பருத்தித்துறை ஞாயிறு

கரவெட்டி மேற்கில் வல்லிநாச்சன் என்பவரது வீடு சுமார் 8 மணியளவில் பகல்வேளையில் தீக்கிரையாகிவிட்டது. உடுப்பிட்டி எம். பி. திரு சிவசிதம்பரமும் காரியதரிசி திரு விஸ்வநாதனும் ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டனர். தீப்பற்றிய சம்பவம் மர்மமாகவே இருக்கிறது.

## பட்டின சபை சுகாதார விழா

சுழிபுரம், ஞாயிறு

மானிப்பாய் பட்டின சபை இன்று தொடக்கம் தொடர்ந்து ஏழு தினங்களுக்கு சுகாதார வார விழாவை ஒவ்வொர் வட்டாரத்திலும் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. இதற்கான சகல ஒழுங்கையும் பட்டின சபைத் தலைவர் அங்கத்தவர் ஆகியோர் கூட்டாகக் கவனித்து வருகின்றனர்.

## மணவாளன் மரணம்

...ண்டி, ஞாயிறு

அப்பிட்டியா... சென் பேரின்ஸ் ... சரிந்து விழுந்ததால் 6 வயதுடைய ஒரு பிள்ளை ஸ்தலத்திலேயே மரணமானது. இரு பிள்ளைகள் பலத்த காயங்களுக்குள்ளாகின.

## ...ந்திரிக்கு...

(-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறிவிடும். இலங்கையில் மொழிப் பிரச்சினையும் இனப் பிரச்சினையும் தீர்ந்து இன்று இந்நாட்டில் தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் சௌஜன்யம் நிலவ வேண்டும். இதற்குத் தாங்கள் சேவை செய்வீர்களென்பது எமது நம்பிக்கை.

❖

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிளிநொச்சி எம். பி. திரு கா. பொ. இரத்தினம் போக்குவரத்து அமைச்சர் திரு ஜு. ஆர். ... வடபகுதிப் புகைவிரத சேவையை சீர்திருத்துவது பற்றி ஒரு மகஜரை அனுப்பியுள்ளார்.

அம்மகஜரில், இரண்டாம் வகுப்புப் படுக்கைகளை முதலாம் வகுப்புப் படுக்கைகளாக மாற்றிப் பிரயாணிகளிடம் பதினைந்து ரூபா கூடுதலாக வாங்கும் பழக்கத்தை நிறுத்தவேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

## இரு சமூக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் அவர்கள் எவ்வளவு தூரம் இறங்கினாலும், இந்த அரசாங்கத்தையும் அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வரும் மக்களையும் ஒன்றுமே செய்துவிட முடியாது.

இந்த நாட்டின் இரு பெரும் சமூகத்தினரிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதில் இந்த அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. விரைவில் வெற்றியும் கண்டுவிடும்.

தேசிய அரசாங்கத்தில் தமிழர்களும் பிரதிநிதித்துவம் வகிப்பதால் இரு சமூகத்தினரின் பிரச்சினைகளையும் அறிந்து செயலாற்ற இது சாதகமாக அமைந்துள்ளது."

### சகவாழ்வே முக்கியம்

திரு ஏ.பி ராஜசூரியர் பேசுகையில்; சிங்களமக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழ முடியாத பட்சத்தில், இருசமூகத்தினரும் சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடிக்காவிட்டால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்கவே முடியாதென்று கூறினார்!

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் மூலம் தமிழ்மக்களுக்கு விடிவு காலம் ஏற்பட்டு விட்டது. இதற்கெல்லாம் மூல காரணமாகத் திகழ்ந்த திரு சி. பி. டி. சில்வாவை நாம் பாராட்டவேண்டும். அவரின் திறமையான செயலினால் இந்த நாடு, பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டு விட்டது" என்றும் திரு ராஜசூரியர் குறிப்பிட்டார்.

### உரும்பராயில்

உரும்பராய், திங்கள்

உரும்பராயில் காணி அமைச்சர் திரு. சி. பி. டி சில்வாவுக்கும், ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. மு. திருச்செல்வத்துக்கும் பொதுமக்களால் வரவேற்கப்பட்ட...

உரும்பராய் கற்பகப்பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்ற மாபெரும் வைபவத்தில் 800 க்கு மேற்பட்ட உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அணிவகுத்துநின்று மரியாதை செலுத்தினர். திருவாளர்கள் சி. பி. டி. சில்வா, நிரந்தரக்காரியதரிசி திரு எம். ஸ்ரீகாந்தா, திரு. மு திருச்செல்வம், அரசாங்க அதிபர் நெவில்ஜெயவீரா ஆகியோர் மலர்மாலையிட்டும் திலகமிட்டும் வரவேற்றுபசரிக்கப் பெற்றனர். உரும்பராய் சந்திரோதயவித்தியாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் உரும்பராய்ச் சந்தியில் அணிவகுத்துமரியாதை செலுத்தினர்.

## 'அரசியல் உரிமை வழங்கவேண்டும்' ஆசிரியர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அண்மையில் நடைபெற்ற வடமராட்சி ஆசிரியர் சங்க 60-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேறிய சில தீர்மானங்கள் வருமாறு:

காலியாக இருக்கும் சகல தரத்திலுமுள்ள அதிபர்கள், தலைமையாசிரியர்கள் பதவிகளுக்கு காலந்தாழ்த்தாது நியமனங்களைச் செய்யுமாறு இச்சங்கம் கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்கிறது.

அரசியல் ஞானமும் நீதி தவறு நேர்மைப் பண்பும் ஒழுக்கமமைந்த வர்க்கங்களில் தலையாயவர் ஆசிரியராகையால் நாட்டின் நலன் கருதி ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை காலந்தாழ்த்தாது அளிக்கவேண்டுமென இச்சங்கம் அரசாங்கத்தை உரிமையுடன் வேண்டுகிறது.

பாடசாலைகள் சுவீகரிக்கப் படமுன் இருந்த விசேட பயிற்சி முறை மீண்டும் முறைக்கு வரவேண்டுமென இச்சபை திரும்பவும் கேட்டுக்கொள்கிறது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. கார்த்திகேசு, உபதலைவர்கள் திருவாளர்கள் ஜே. சத்தியசீலன், எஸ். மகேசன், கே. பத்மநாதன், பொதுக்காரியதரிசி: திரு செ. குணபாலசிங்கம், தனாதிகாரி: திரு. கே. இராசரத்தினம்.

## ஆயுத உற்பத்தியைக் கைவிட யோசனை

பெர்லின், ஜூலை 18

"ஆயுத உற்பத்தியை நிறுத்தவேண்டுமென்பதில் ஓர் இணக்கம் ஏற்படவேண்டுமென்றும், நேச உறவு ஏற்படுத்தும் பொருட்டு இரு ஜெர்மன் அரசாங்கங்களிடையே பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டுமென்றும் நாங்கள் விரும்புகிறோம்" இவ்வாறு ஜெர்மன் ஜனநாயக குடியரசு ஜனாதிபதி திரு. வோல்டர் உல்பிரிச் ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஜெர்மன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தமது கொள்கையை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

## இன்று

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவத்தில் இரவு 7-30 மணிக்கு முத்தமிழ்மணி மணிபாகவதர் 'முருகம்மையார்' எனும் சரிதைபற்றி கதாகாலக்ஷேபம் செய்வார்.

கல்வி
G A Q E, G. S Q E.
வகுப்புகள், யாழ்ப்பாணம் சிக்சன் மகாவித்தியாலயத்தில் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகிறது. சேரவிரும்புவோர் உடனடியாகச் சேரவும். 668

## மரண அறிவித்தல்

### ஆ. முத்தப்பு

ஏழாலை மேற்கு நல்லபிள்ளையின் அருமைக் கணவரும் திருமதி ஆச்சிஅம்மா நடராசா, திரு நடராசா (பிரபல வர்த்தகர் சுன்னாகம்), திரு. சின்னத்துரை (பொறியியலாளர் பொது மராமத்து இலாகா, கொழும்பு) ஆகியோரின் தந்தையும், திரு. எம். நடராசா (ஆசிரியர், முருகமூர்த்தி வித்தியாலயம் உடுவில்)வின் மாமனுமாகிய ஆறுமுகம் முத்தப்பு காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 5 மணிக்கு ஏழாலை மயானத்திற்கு தகன கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். 670

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.